ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1905/6 - 2015 මාර්තු මස 09 වැනි සඳුදා - 2015.03.09

1905/6 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மனித வள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்*

*1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மனித வள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தில் 18 – 2(இ) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அமைக்கப்பட்ட கட்டளை.*

சட்டத்தரணி ஜே.பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சி மன்றமும் மாகாண நிருவாகமும், மனித வள, கல்வியும் கலாசார நடவடிக்கையும்,
காணி, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்கல், விநியோக அமைச்சர்

முதலமைச்சர் அலுவலகம்,
குருணாகல்.
2015, பெப்புருவரி 27.

**கட்டளை**

01. இந்த கட்டளை 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் பற்றிய கட்டளையாக அறிமுகப்படுத்தப்படும்.

**1 ஆம் பகுதி**

ஞாயிறு மற்றும் முழு நோன்மதி போயா தினங்களில் உதவி வகுப்புக்கள் நடாத்தல்

02. எவர் ஒருவரினாலும் வடமேல் மாகாணத்தினுள் ஞாயிறு தினங்களில் மு.ப. 6.00 தொடக்கம் பி.ப. 1.30 வரையிலான காலத்தினுள் 1 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையிலான (க.பொ.த. சாதாரண தரம் வரை) பாடசாலை மாணவர்களுக்கான உதவி வகுப்புக்கள் நடத்தப்படலாகாததுடன், முழு நோன்மதி போயா தினங்களில் எவ்விதத்திலும் வகுப்புக்கள் நடாத்தப்படலாகாது.

**2 ஆம் பகுதி**

நிறுவனத்தினை மேற்பார்வை செய்தல்

03. ஏதாவதொரு நிறுவனத்தினை பரிசீலிப்பதற்கோ ஏதாவதொரு நிறுவனம் பற்றிய தகவல் பெற்றுக் கொள்வதற்காகவோ மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அதிகாரம் உண்டு.

04. மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது உதவிக்கான உத்தியோகத்தர்களுடன் நிறுவனத்தினை செயற்படுத்தும் நேரத்தினுள் நிறுவனத்தினுள் பிரவேசிப்பதற்கும், தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் அதிகாரம் உண்டு.

05. தேவையான தகவல்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேவைப்படுகின்ற மற்றைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுத்தல் நிறுவனத்தின் பரிபாலகரின்/முகாமையாளரின் பொறுப்பாகும்.

06. தலைவரினால் வடமேல் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் பற்றிய கட்டளை சம்பந்தமான சுய அதிகாரத்தினை பொது முகாமையாளரிடத்தில் பொறுப்படைத்தல் வேண்டும்.

### 3 ஆம் பகுதி
உரிமப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்

07. ஏதாவதொரு நிறுவனத்தினால் இந்த அறிவித்தலில் 2 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறப்பட்டுள்ளது பற்றி தலைவரின் நோக்காகும் சந்தர்ப்பத்தில் வடமேல் மனிதவள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 18 – 2(இ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் இரத்து செய்வதற்கான கட்டளையினை இடாததற்கான காரணம் இருப்பின் மூன்று வாரங்களினுள் அறிவிக்குமாறு உரிமப் பத்திரதாரியிற்கு பதிவுத் தபாலில் அறிவித்தல் வேண்டும்.

08. மூன்று வாரங்களினுள் அந்த கடிதத்திற்கு பதில் அனுப்பாது விடின் அல்லது அனுப்பப்பட்ட பதில் திருப்தியற்றதாகும் சந்தர்ப்பத்தில் மேலே 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட உரிமப் பத்திரத்தினை இரத்து செய்யும் கட்டளையினை பிறப்பிப்பதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

### 4 ஆம் பகுதி
மேன்முறையீடு

09. உரிமப் பத்திரம் ஒன்றினை இரத்து செய்தல் சம்பந்தமாகவோ உரிமப் பத்திரத்தினை புதுப்பித்தல் சம்பந்தமாகவோ திருப்தியடையாத ஒருவர் அமைச்சர் அவர்களுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

10. அவ்வாறான மேன்முறையீடு சம்பந்தமாக அமைச்சரினால் ஆலோசனை சபையின் உறுப்பினர்கள் மூவருக்கு மேற்படாத குழுவினால் பரிசீலனை செய்து பெற்றுக் கொள்ளும் சிபாரிசின் பேரில் தீர்மானம் வழங்க முடியும்.

11. தமது மேன்முறையீடு சம்பந்தமாக தனிப்பட்ட முறையிலோ முகவர் ஒருவரினாலோ காரணம் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் விண்ணப்பதாரிக்கு இருத்தல் வேண்டும்.

12. மேன்முறையீடு சம்பந்தமாக அமைச்சர் அவர்களின் தீர்மானம் கடைசியானதும் தீர்க்கமானதாகவும் இருத்தல் வேண்டும்.

### 5 ஆம் பகுதி
ஆலோசனைக் குழு

13. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட் கிழமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1780/4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) ஆம் பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் வடமேல் மாகாண சபையினால் 1994 ஆம் ஆணடின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 18 – 2(இ) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அமைக்கப்பட்ட கட்டளையின் கீழ் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை குழு உரித்தாகும்.

### 6 ஆம் பகுதி
நிருவாக நடவடிக்கை

14. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட் கிழமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1780/4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) ஆம் பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் வடமேல் மாகாண சபையினால் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 18 – 2(இ) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அமைக்கப்பட்ட கட்டளையின் கீழ் நிறுவனத்தினை பதிவு செய்தல், நிருவாகம் மற்றும் ஆலோசனை சேவை வழங்கும் நடவடிக்கைக்காக அதிகார சபையினால் அமைக்கப்பட்ட விஷேட நிருவாக பிரிவு இங்கு உரித்தாகும்.

**7 ஆம் பகுதி**

குற்றமும் தண்டனையும்

15. இந்த அறிவித்தலின் கட்டளையின் கீழ் 02 ஆம் பிரிவில் உள்ள கட்டளைகளை மீறல்.

16. உரிமப் பத்திரம் ஒன்றினை பெற்றுக் கொண்டுள்ள நிறுவனம், தலைவரினால் மனித அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் பற்றிய கட்டளையின் கீழ் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு இனங்காதிருத்தல்.

17. உரிமப் பத்திரம் ஒன்றினை பெற்றுக் கொண்டுள்ள நிறுவனம், தலைவரினால் அளிக்கப்பட்ட அதிகாரப்படி செயற்படும் உத்தியோகத்தர் ஒருவருக்கு தேவையான தகவல்கள் மற்றும் உரிய உதவி வழங்காதிருத்தல்.

18. இந்த நிபந்தனையின் கீழ் குற்றமாக காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு செயலினை செய்தல் அல்லது அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை செய்யாதிருத்தல் சம்பந்தமாக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். குற்றவாளியாகும் சந்தர்ப்பத்தில் ஒரு வருட காலம் சிறைத் தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபா வரையிலான தண்டப் பணம் அல்லது இரு வகையில் ஒரு வகையிலான தண்டனைக்கு அல்லது இரு வகை தண்டனையையும் விதிக்கப்படலாம்.

19. இந்த கட்டளைகளின் செயற்பாடுகளுக்காக :

"அமைச்சர்" என்பது, வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி விடயப் பொறுப்புடைய அமைச்சர் என்று கருதப் படும்.

"அதிகார சபை" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகார சபை என்று கருதப்படும்.

"பணிப்பாளர் சபை" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குழு என்று கருதப்படும்.

"தலைவர்" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் என்று கருதப்படும்

"நிறைவேற்று பணிப்பாளர்" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பணிப்பாளர் என்று கருதப்படும்.

"பொது முகாமையாளர்" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் என்று கருதப்படும்.

"நிறுவனம்" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்திக்கு உரித்தான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 10 மாணவர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினை கொண்ட நிறுவனம் என்று கருதப்படும்

"சட்டம்" என்பது 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் மனித வள அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் என்று கருதப்படும்.

"ஆலோசனை" என்பது வடமேல் மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக ஆலோசனை வழங்கல் மற்றும் அதற்கு தொடர்ந்து சேவை வழங்கல் என்று கருதப்படும்.

"ஆலோசனை குழு" என்பது 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட் கிழமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1780/4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) ஆம் பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் வடமேல் மாகாண சபையினால் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல் மாகாண மனித வள அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் 18 – 2(இ) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அமைக்கப்பட்ட கட்டளையின் கீழ் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை குழு என்று கருதப்படும்.

"உரிமப் பத்திரம்" என்பது 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட் கிழமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1780/ 4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) ஆம் பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் வடமேல் மாகாண சபையினால் 1994 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் மனித வள அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் 18 – 2(இ) ஆம் பிரிவின் கீழ், அமைச்சரினால் அமைக்கப்பட்ட கட்டளையின் கீழ் வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் என்று கருதப்படும்.

இக் கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்று மாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக் கொள்ளப்படும்.

03-662

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.